A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 90 / 2024**

திருமதி V.சாரதாமணி,
க/பெ.(லேட்) வேலுச்சாமி,
பெருமாபாளையம், மொடக்குறிச்சி அஞ்சல்,
ஈரோடு – 638 104. ………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு G. தங்கமணி)

எதிர்

1. செயற்பொறியாளர்/ வினியோகம்/தெற்கு/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

2. உதவிசெயற்பொறியாளர்/இ&பே/எழுமாத்தூர்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
எழுமாத்தூர், பூந்துறை ரோடு, 110/22-11 Grid Sub-station,
எழுமாத்தூர் அஞ்சல், ஈரோடு – 638104.

3. உதவி மின்பொறியாளர்/இ&பே/மொடக்குறிச்சி,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
190, முத்தூர் மெயின் ரோடு, அரசு மருத்துவமனை எதிரில்,
மொடக்குறிச்சி & அஞ்சல், ஈரோடு – 638 104.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு S. சண்முகம், செயற்பொறியாளர்/ வினியோகம்/தெற்கு/ஈரோடு
திரு P. தனக்கோடி, உதவி மின்பொறியாளர்/இ&பே/மொடக்குறிச்சி)

**மனு பெறப்பட்ட நாள்: 26-12-2024**

**அட்டவணையிடப்பட்ட நாள் 05-02-2025**

**ஒத்திவைக்கப்பட்ட கேட்புரை நாள்: 12-02-2025**

**ஆணை நாள்: 18-02-2025**

26.12.2024 அன்று பெறப்பட்ட திருமதி V.சாரதாமணி, க/பெ.(லேட்) வேலுச்சாமி, பெருமாபாளையம், மொடக்குறிச்சி அஞ்சல், ஈரோடு – 638 104 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 04/2025 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 05.02.2025 அன்று அட்டவணையிடப்பட்டு எதிர்மனுதாரரின் வேண்டுகோளுக்கிணங்க கேட்புரை தள்ளி வைக்கப்பட்டு 12.02.2025 அன்று விசாரணை நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையின் மூலம் பெறப்பட்ட வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர் திருமதி சாரதாமணி விவசாய மின் இணைப்பு எண். 04–032–005–132–ஐ தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் திருமதி சாரதாமணி விவசாய மின் இணைப்பு எண்.04–032–005–132–ஐ தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக் கோரி அது சம்பந்தமாக அனைத்து ஆவணங்களையும் மொடக்குறிச்சி மின்சார வாரியத்தில் சமர்ப்பித்து விண்ணப்பித்துள்ளார்.

2.2 திரு. ஜெகநாதன் அவர்கள் பெயர் மாற்ற விண்ணப்பம் பரிசீலனை செய்ய ஆட்சேபனை தெரிவித்து வழக்குரைஞர் மூலம் 23.07.2024 அன்று அறிவிப்பு கடிதம் பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதிலில் திருப்தி இல்லாததால் மேல்முறையீட்டாளர் ஈரோடு மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 10.09.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், ஈரோடு மின்பகிர்மான வட்டம் 09.12.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 ஈரோடு மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 09.12.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *""மன்றத்தின் தீர்வு:*
> *எனவே மனுதாரர் மன்றத்தில் சமர்பித்த ஆவணங்களின் படியும். விசாரணையின் படியும், நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மின் இணைப்பு எண் 04-032.005-132 விவசாய மின் இணைப்பை திரு.ஜெகநாதன் பெயரிலிருந்து மனுதாரரின் பெயருக்கு மாற்றம் கோரும் விண்ணப்பத்தின் மீது இம்மன்றம் பரிசிலினைக்கு எடுக்க இயலாது என முடிவு செய்து, மனுவானது தள்ளுபடி செய்யப்படுகின்றது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 05.02.2025 அன்று விசாரணை அட்டவணையிடப்பட்டது. பின்னர் எதிர்மனுதாரரின் வேண்டுகோளுக்கிணங்க விசாரணை 12.02.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு G. தங்கமணி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு S. சண்முகம், செயற்பொறியாளர்/ வினியோகம்/ தெற்கு/ஈரோடு மற்றும் திரு P. தனக்கோடி, உதவி மின்பொறியாளர்/ இ&பே/மொடக்குறிச்சி ஈரோடு மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகளில்

இம்முறையீட்டு மனுவிற்கு சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் திருமதி சாரதாமணி மின் இணைப்பு எண்.04–032–005–132 தனது பெயருக்கு பெயர் மாற்றம் சம்மந்தமாக மொடக்குறிச்சி மின்சார வாரியத்தில் 19–07–2024 அன்று அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளதாகவும், 45 நாட்களுக்கு மேல் ஆகியும் எந்த முடிவும் எடுக்கவில்லை எனவும், தான் மீண்டும் ஒரு முறை உறுதி கூறுவதாக வடபுறம் உள்ள கிணறு மற்றும் நிலம் சம்மந்தமாக சமர்ப்பித்த அனைத்து ஆவணங்களும் சரியானது என தெரிவித்துள்ளார்.

5.2 2007ஆம் ஆண்டுக்கு பிறகு கிணறு மற்றும் நிலம் 100 சதவிகிதம் தனக்கும் தனது வாரிசுகளுக்கும் மட்டும் சொந்தமானது எனவும், அது சம்பந்தமாக சான்றிதழ் – கொடுத்துள்ளதாகவும், ஆகவே தனது பெயர் மாற்றம் சம்பந்தமாக மனுவை பரிசீலித்து மாற்றி கொடுக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 திருமதி. வே. சாரதாமணி க/பெ.(லேட்) வேலுச்சாமி அவர்கள் இணையவழியில் மின் இணைப்பு எண் 032–005–132 விவசாய மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்ய தவறியதாக புகார் தெரிவித்துள்ளதாகவும், மின் இணைப்பு எண் 032–005–132 விவசாய பயன்பாடு உபயோகத்திற்காக 3 HP வழங்கப்பட்டு மின் இணைப்பு பெற்ற திரு.சீனிவாசக்கவுண்டர் இறந்து விட்டநிலையில் அவரது வாரிசு திரு. P.S. ஜெகநாதன் அவர்களுக்கு கடந்த 30.12.2003 அன்று பெயர் மாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி மின் இணைப்பு எண் 032–005–132–ன் மீது தனக்கு உரிமை உள்ளது என தெரிவித்து பெயர் மாற்றம் கோரி இணையதளம் மூலம் 18.07.2024 அன்று விண்ணப்பித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 திருமதி.சாரதாமணி மின் இணைப்பு எண் 032–005–132 பெயர் மாற்றம் கோரி இணையதளம் மூலம் 18.07.2024 அன்று விண்ணப்பித்ததாகவும், அதற்குரிய அனைத்து ஆவணங்களையும் அளித்து உள்ளதாகவும், மேற்படி பெயர் மாற்ற விண்ணப்பத்தின் மீது CMD TANGEDCO Proceeding No. 25 dt. 03.05.2021 ன்படி 50 நாட்கள் ஆகியும் பெயர் மாற்றம் வழங்க தவறியதால் ஈரோடு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் கடந்த 09.09.2024ல் மனு அளித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேற்படி மின் இணைப்பு எண் 032–005–132 விவசாய பயன்பாடு உபயோகத்திற்காக 3 HP வழங்கப்பட்டு மின் இணைப்பு பெற்ற திரு.சீனிவாசக்கவுண்டர் இறந்துவிட்ட நிலையில் அவரது வாரிசு திரு.ஜெகநாதன் அவர்களுக்கு கடந்த 30.12.2003 அன்று பெயர் மாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்ற தகவல் தவறானது எனவும், இது குறித்து பெயர் மாற்ற கோப்புகளை ஆராய்ந்த போது அப்போதைய விவசாய உரிமை தொகை பெற பயனாளர் என்ற வகையில் தான் அனுமதி வழங்கப்பட்டு உள்ளதாகவும், மேற்படி பெயர் மாற்றம் செய்ய உதவி கணக்கு அதிகாரிக்கு தான் அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேற்படி அதிகாரி அனுமதி வழங்கினாலும் பெயர் மாற்றம் கட்டணம் செலுத்த வேண்டும் எனவும், மேற்படி பெயர் மாற்ற கட்டணம் செலுத்தாததால் திரு P.S.ஜெகநாதன் அவர்களுக்கு வழங்கியது உரிமைக்கான பெயர் மாற்றம் இல்லை எனவும், இது குறித்து மேற்படி பெயர் மாற்றம் அனுமதி என்ற ஆவண நகலை பார்வையிட்ட போது மேற்படி பெயர் மாற்றம் நீதிமன்றத்திற்கான உரிமை ஆவணமாக ஏற்க முடியாது என தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், பயனார் என்ற வகையில் அனுமதி வழங்கப்பட்டு மேற்கண்ட அனுமதி நகல் தாசில்தார் அவர்களுக்கு அனுப்பபட்டு உரிமை தொகை வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 திரு. PS. ஜெகநாதன் அவர்கள் பெயர் மாற்றம் செய்ததில் உள்ள தனது காலஞ்சென்ற கணவர் வேலுசாமி அவர்களின் கையொப்பம் போலியானது எனவும், எந்த ஒரு ஆட்சேபணையின்மை கடிதமும் சாட்சி கையொப்பம் இல்லாமல் சட்டத்தின் முன்பு செல்லாது எனவும், மேலும் ஏற்கனவே திரு ஜெகநாதன் அவர்கள் பெயரில் பெயர் மாற்ற ஆட்சேபணை தெரிவித்த தனது கணவரின் கடித நகல் மன்றத்தில்

சமர்ப்பிக்கப்பட்டதாகவும், நகல் தர மறுக்கப்பட்ட சூழ்நிலையில் மேற்படி ஆட்சேபணைதாரர் வசம் ஆவணம் இல்லை என்ற உண்மை தெரிய வருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திருமதி. சாராதாமணி க/பெ.(லேட்) வேலுச்சாமி அவர்கள் மின் இணைப்பு எண் 032–005–132 விவசாய மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்ய தவறியதாக நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் புகார் தெரிவித்திருந்ததாகவும், மின் இணைப்பு எண் 032–005–132 விவசாய பயன்பாடு உபயோகத்திற்காக 3 HP வழங்கப்பட்டு மின் இணைப்பு பெற்ற திரு.சீனிவாசக்கவுண்டர் இறந்து விட்ட நிலையில் அவரது வாரிசு திரு ஜெகநாதன் அவர்களுக்கு கடந்த 30.12.2003 அன்று பெயர் மாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்படி மின் இணைப்பு எண் 032–005–132–ன் மீது தனக்கு உரிமை உள்ளது என தெரிவித்து பெயர் மாற்றம் கோரி இணையதளம் மூலம் 18.07.2024 அன்று விண்ணப்பித்துள்ளதாகவும், கடந்த 19.07.2024ல் திரு. ஜெகநாதன் அவர்கள் பெயர் மாற்றம் விண்ணப்பம் பரிசீலனை செய்ய ஆட்சேபணை தெரிவித்துள்ளதாகவும், மேற்படி விண்ணப்பம் பரிசீலனை செய்ய ஆட்சேபனை தெரிவித்து திரு. ஜெகநாதன் அவர்கள் வழக்குரைஞர் மூலம் 23.07.2024 அன்று அறிவிப்பு கடிதம் பெறப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 பத்திர பதிவுகளில் மின் இணைப்பு எண் குறிப்பிடாத காரணத்தினால் திரு. ஜெகநாதன் அவர்கள் மின் இணைப்பில் உரிமை உள்ளதாகவும், மேலும் மின் இணைப்பை இடமாற்றம் செய்வதற்கு தேவையான ஆவணங்கள் குறித்து விளக்கம் கோரி 01.08.2024 அன்று கடிதம் அளித்துள்ளதாகவும், உதவி பொறியாளர்/இ&பே/ மொடக்குறிச்சி அவர்கள் மேற்படி மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்வதற்கு சட்ட கருத்துரு (Legal Opinion) வழங்கக்கோரி 12.08.2024 அன்று வாரிய வழக்குரைஞர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியதாகவும், வாரிய வழக்குரைஞர் அவர்களிடமிருந்து 20.08.2024 அன்று சட்ட கருத்துரு (Legal Opinion) பெறப்பட்டதாகவும், அதில்

பிணைமுறிவு பத்திரம் (indemnity Bond) பெற்றுக் கொண்டு பெயர் மாற்றம் செய்யலாம் என தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் கடந்த 08.08.2024–ல் உதவி பொறியாளர்/இ.பே/மொடக்குறிச்சி அவர்கள் மேற்படி பெயர் மாற்றம் செய்வதில் உள்ள குறிப்புகள் மீது தெளிவுரை (Clarification) கோரி கடிதம் சமர்ப்பித்துள்ளதாகவும், மேற்கண்ட சூழ்நிலையில் பத்திர பதிவுகளில் மின் இணைப்பு எண் குறிப்பிடாத காரணத்தினால் பெயர் மாற்றம் மேற்கொள்வதா எனவும் திரு. ஜெகநாதன் அவர்கள் கோரி உள்ளவாறு கிணற்றில் அவருக்கு உரிமை அல்லாத நிலையிலும் விவசாய மின் இணைப்பை அவர் பெயரிலேயே தொடரலாமா என்பதால் உதவி செயர்பொறியாளர்/இபே/எழுமாத்தூர் அவர்கள் மேற்கண்ட ஷரத்துகள் குறித்து தெளிவுரை வழங்குமாறு கோரியதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் தமிழ்நாடு மின் ஒழுங்குமுறை விதிகளின் படி மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய கோரும் கிணற்றின் முழு பங்கும் விண்ணப்பதாரருக்கே இருக்கும் நிலையில் தற்போதைய மின் இணைப்பு உரிமையாளரின் சம்மத கடிதம் இல்லாமல் பெயர் மாற்றம் செய்வதற்கு உரிய தெளிவுரை கோரி கடிதம் சமர்பிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேற்கண்ட தெளிவுரை (Clarification) குறித்து மேற்பார்வை பொறியாளர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள 29.08.2024 அன்று தற்போதைய கூடுதல் வருவாய் ஆவணங்கள் திரு.P.S.ஜெகநாதன் த/பெ.சீனிவாசக்கவுண்டர் அவர்களிடம் பெற்று வழங்க கோரியுள்ளதாகவும், மேலும் இது தொடர்பாக உதவி பொறியாளர்/இபே/ மொடக்குறிச்சி அவர்கள் சுடந்த 06.09.2024 அன்று பதிவு தபால் மூலம் கிணறு பாத்தியத்திற்கான ஆவணங்கள் /சான்றுகள் கோரி திரு.P.S.ஜெகநாதன் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 திரு ஜெகநாதன் அவர்கள் வழக்குரைஞர் மூலமாக 13.09.2024 அன்று பதில் அறிவிப்பு வழங்கியுள்ளதாகவும், வழக்குரைஞர் மூலமாக பெறப்பட்ட கடிதத்தில் ஏற்கனவே பெயர் மாற்றத்திற்காக ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டதாகவும் கூடுதல் ஆவணங்கள் கோர எவ்வித உரிமையும், பாத்தியமும் இல்லை என தெரிவித்துள்ளதாகவும், மேலும் யார் பெயரில் மின் இணைப்பு பெறப்பட்டுள்ளதோ,

அவர்களிடமே மீண்டும் ஆவணங்களை கோருவது மின் வாரிய சட்டதிட்டங்களுக்கு ஏற்புடையதல்ல எனவும் தெரிவித்துள்ளதாகவும், ஆனால் இது வரை எந்த வருவாய் ஆவணமும் சமர்பிக்கப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 இதற்கிடையில் திரு. ஜெகநாதன் அவர்களும் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு அளித்து ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் திரு. ஜெகநாதன் அவர்கள் கடந்த 04.10.2024ல் மேற்படி பெயர் மாற்றம் செய்ய அசல் வழக்கு எண் 296/ 2024ன்படி வழக்கு தொடர்ந்த காரணத்தால் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் பெயர் மாற்ற மனுவின் மீது உத்திரவு வழங்க இயலாது என குறிப்பிட்டு திருமதி சாரதாமணி மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேற்படி ஆட்சேபணை காரணமாகவும் வழக்கு நிலுவை காரணமாகவும் திருமதி. சாராதாமணி அவர்கள் இணைய வழியில் விண்ணப்பித்த மின் இணைப்பு எண் 032-005-132-க்கு விவசாய மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி சாரதாமணி மின் இணைப்பு எண்.04-032-005-132-ஐ தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக் கோரி அது சம்பந்தமாக அனைத்து ஆவணங்களையும் மொடக்குறிச்சி மின்சார வாரியத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும், 45 நாட்களுக்கு மேல் ஆகியும் எந்த முடிவும் எடுக்கவில்லை எனவும், 2007ஆம் ஆண்டுக்கு பிறகு கிணறு மற்றும் நிலம் 100 சதவிகிதம் தனக்கும் தனது வாரிசுகளுக்கும் மட்டுமே சொந்தமானது எனவும், அது சம்பந்தமாக சான்றிதழ் - கொடுத்துள்ளதாகவும், ஆகவே தனது பெயர் மாற்றம் சம்பந்தமாக மனுவை பரிசீலித்து மாற்றி கொடுக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேற்படி மின் இணைப்பு எண் 032–005–132 விவசாய பயன்பாடு உபயோகத்திற்காக 3 HP வழங்கப்பட்டு மின் இணைப்பு பெற்ற திரு.சீனிவாசக்கவுண்டர் இறந்துவிட்ட நிலையில் அவரது வாரிசு திரு.ஜெகநாதன் அவர்களுக்கு கடந்த 30.12.2003 அன்று பெயர் மாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்ற தகவல் தவறானது எனவும், இது குறித்து பெயர் மாற்ற கோப்புகளை ஆராய்ந்த போது அப்போதைய விவசாய உரிமை தொகை பெற பயனாளர் என்ற வகையில் தான் அனுமதி வழங்கப்பட்டு உள்ளதாகவும், மேற்படி மின் இணைப்பு எண் 032–005–132–ன் மீது தனக்கு உரிமை உள்ளது என தெரிவித்து பெயர் மாற்றம் கோரி இணையதளம் மூலம் விண்ணப்பித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 திரு. PS. ஜெகநாதன் அவர்கள் பெயர் மாற்றம் செய்ததில் உள்ள தனது காலஞ்சென்ற கணவர் வேலுசாமி அவர்களின் கையொப்பம் போலியானது எனவும், எந்த ஒரு ஆட்சேபணையின்மை கடிதமும் சாட்சி கையொப்பம் இல்லாமல் சட்டத்தின் முன்பு செல்லாது எனவும், மேலும் ஏற்கனவே திரு ஜெகநாதன் அவர்கள் பெயரில் பெயர் மாற்ற ஆட்சேபணை தெரிவித்த தனது கணவரின் கடித நகல் மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், நகல் தர மறுக்கப்பட்ட சூழ்நிலையில் மேற்படி ஆட்சேபணைதாரர் வசம் ஆவணம் இல்லை என்ற உண்மை தெரிய வருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் திருமதி. சாராதாமணி க/பெ.(லேட்) வேலுச்சாமி அவர்கள் மின் இணைப்பு எண் 032–005–132 விவசாய பயன்பாடு உபயோகத்திற்காக 3 HP வழங்கப்பட்டு மின் இணைப்பு பெற்ற திரு.சீனிவாசக்கவுண்டர் இறந்து விட்ட நிலையில் அவரது வாரிசு திரு ஜெகநாதன் அவர்களுக்கு கடந்த 30.12.2003 அன்று பெயர் மாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேற்படி மின் இணைப்பு எண் 032–005–132–ன் மீது தனக்கு உரிமை உள்ளது என தெரிவித்து பெயர் மாற்றம் கோரி இணையதளம் மூலம் 18.07.2024 அன்று மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளதாகவும், கடந்த 19.07.2024ல் திரு. ஜெகநாதன் அவர்கள் பெயர் மாற்ற விண்ணப்பத்தினை பரிசீலணை செய்ய ஆட்சேபணை

தெரிவித்துள்ளதாகவும், மேலும் இது தொடர்பாக உதவி பொறியாளர்/மொடக்குறிச்சி அவர்கள் பதிவு தபால் மூலம் கிணறு பாத்தியத்திற்கான ஆவணங்கள் /சான்றுகள் கோரி திரு.P.S.ஜெகநாதன் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 திரு ஜெகநாதன் அவர்கள் பதில் கடிதத்தில் ஏற்கனவே பெயர் மாற்றத்திற்காக ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டதாகவும் கூடுதல் ஆவணங்கள் கோர எவ்வித உரிமையும், பாத்தியமும் இல்லை என தெரிவித்துள்ளதாகவும், மேலும் யார் பெயரில் மின் இணைப்பு பெறப்பட்டுள்ளதோ, அவர்களிடமே மீண்டும் ஆவணங்களை கோருவது மின் வாரிய சட்டதிட்டங்களுக்கு ஏற்புடையதல்ல என தெரிவித்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இதற்கிடையில் திரு. ஜெகநாதன் அவர்கள் மேற்படி பெயர் மாற்றம் செய்ய அசல் வழக்கு எண் 296/ 2024ன்படி வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், மேற்படி ஆட்சேபனை காரணமாகவும் வழக்கு நிலுவை காரணமாகவும் திருமதி. சாராதாமணி அவர்கள் இணைய வழியில் விண்ணப்பித்த மின் இணைப்பு எண் 032–005–132–க்கு விவசாய மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 மேல்முறையீட்டாளர் தற்சமயம் திரு ஜெகநாதன் என்பவர் பெயரில் இருக்கும் மின் இணைப்பு எண் 032–005–132–ஐ தன் பெயருக்கு மாற்ற கோரி மேல்முறையீடு செய்துள்ளார். அந்த மின் இணைப்பு திரு ஜெகநாதன் பெயரில் 30.12.2003–லிருந்து இருப்பதும் ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. இவ்வழக்கில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு விதி 5(7)– இன்படி பெயர் மாற்றம் நுகர்வோர் பெயரில் உள்ள மின் இணைப்பு அவர் இறப்பு மற்றும் பிற நிகழ்வான விற்பனை, (ஏலத்தின் மூலமும்), குத்தகை, பதிவு செய்யப்பட்ட குத்தகை அல்லது lawful occupant–ஆக இருக்கும் நிலையில் உரிய கட்டணம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் செயல்படுத்த முடியும் என்று அறிய முடிகிறது.

7.10 மேல்முறையீட்டாளர் கேட்புரையின் போது மின் இணைப்பு எண் 032–005–132 தங்களுடைய பாகபிரிவினையில் குறிப்பிடப்பட்டதா என்று வினவிய போது இல்லை

என்றும் ஆனால் கிணறு தன் பெயரில் இருப்பதாக தெரிவித்தார். இந்நிலையில் திரு ஜெகநாதன் மின் இணைப்பு எண் 032-005-132 பெயர் மாற்றம் செய்வதற்கு ஆட்சேபனை தெரிவித்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேலும் மாண்புமிகு Judicial Magistrate Cum District Munsif of Elumathur நீதிமன்றத்தில் வழக்கு எண் O.S. No. 296 of 2024 dt. 04.10.2024 உரிமைதாரர் மற்றும் மேல்முறையீட்டாளர் மீது மின் இணைப்பு எண் 032-005-132 சம்பந்தமாக வழக்கு நிலுவையில் இருப்பது தெரிய வருகிறது, மேல்முறையீட்டாளரும் கேட்புரையின் போது அதனை ஒப்புக் கொண்டார்.

7.11 இது சம்பந்தமாக மனுதாரரின் கவனம் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதியின் 17(4) (e) மற்றும் (d) ஆகிய பிரிவுகளுக்கு ஈர்க்கப்படுகிறது. அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"17. Procedure for filing a complaint*
>
> ***
>
> *(4) No complaint to the Electricity Ombudsman shall lie unless:*
>
> ***
>
> *(c) The complaint, which is not settled, is not in respect of the same subject, which was settled through the office of the Electricity Ombudsman in any previous proceedings whether received from the same complainant or along with one or more complainants or anyone or more of the parties concerned with the subject matter;*
>
> *(d) The complaint does not pertain to the same subject matter for which any proceedings beforeany court is pending or a decree or award or a final order has already been passed by any competent court; and*
>
> *(e) The complaint is not frivolous or vexatious in nature."*

மேற்கண்ட விதி 17(4)(d)- யின்படி முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது என அறிய முடிகிறது.

7.12 மேலும் இம்மேல்முறையீட்டின் பொருள் சம்பந்தமான வழக்கு எண் O.S. No. 296 of 2024 dt. 04.10.2024 மாண்புமிகு Judicial Magistrate Cum District Munsif of Elumathur நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளருக்கு எதிராக நிலுவையில் இருப்பதாக

கேட்புரையின் போது மேல்முறையீட்டாளர் தெரிவித்த நிலையில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் நுகர்வோரின் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகள், 2004–இன் உட்பிரிவு 17(4)(d)–இன் படி இந்த மேல்முறையீட்டு மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள இயலாது என தீர்வு செய்யப்படுகிறது. மேலும், மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் வழங்கிய தீர்வில் மாற்றம் எதுவும் தேவையில்லை என்பதால் இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளரின் முறையீடு சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் இந்த மேல்முறையீட்டு மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள இயலாது என முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 90/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**“No Consumer, No Utility”**

<u>பெறுநர்</u>

1. திருமதி V.சாரதாமணி, - By RPAD
க/பெ.(லேட்) வேலுச்சாமி,
பெருமாபாளையம், மொடக்குறிச்சி அஞ்சல்,
ஈரோடு – 638 104.

2. செயற்பொறியாளர்/ வினியோகம்/தெற்கு/ஈரோடு,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

3. உதவிசெயற்பொறியாளர்/இ&பே/எழுமாத்தூர்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
எழுமாத்தூர், பூந்துறை ரோடு, 110/22–11 Grid Sub–station,
எழுமாத்தூர் அஞ்சல், ஈரோடு – 638104.

4. உதவி மின்பொறியாளர்/இ&பே/மொடக்குறிச்சி,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
190, முத்தூர் மெயின் ரோடு, அரசு மருத்துவமனை எதிரில்,
மொடக்குறிச்சி & அஞ்சல், ஈரோடு – 638 104.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
948, EVN ரோடு, ஈரோடு – 638 009.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.